<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி</u>

O.S. No.170/2013

2019 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் நாள் வெள்ளிக்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணக்குமார், Bench Clerk Gr.I அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கராஜ் | தொழில் | : |
| த/பெ. \| க/பெ. | : | வட்டம் | : |
| வயது | : | கிராமம் | : |
| ஜாதி | : | மதம் | : |

<u>வா.சா.7</u>
<u>முதல் விசாரணை</u>

நான் பெத்துப்பட்டியில் குடியிருக்கிறேன். வாதியை தெரியும். இமயம் அறக்கட்டளையின் கல்லூரிகளை தெரியும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து இன்று சம்மன் வந்தது. எங்கள் ஊருக்கு பக்கத்தில் இமயம் கல்லூரியின் நிலம் உள்ளது. மேஸ்திரி ஒருவரை வைத்து கட்டிடம் கட்டினேன். எனக்கு காண்ட்ராக்டர் லைசென்ஸ் இல்லை. நான் காண்ட்ராக்டராக எங்கு பதிவு செய்யவில்லை. எனக்கு கரூர் வைஸ்யா வங்கி கண்ணனூர் கிளையில் கணக்கு உள்ளது. முதல் பிரதிவாதி அறக்கட்டளைக்கு தேனா வங்கியில் வங்கி கணக்கு இருந்ததா என்றால் தெரியாது. முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையிலிருந்து கட்டிடம் கட்டியதற்காக மொத்தம் ரூ.50 லட்சம் வரை என்னுடைய வங்கி கணக்கில் பணம் மாறுதல் செய்யப்பட்டிருக்குமா என்றால் குறைவாக தான் இருக்கும். கணக்குகளை பார்த்தால் தான் சொல்ல முடியும். 8, 9 வருடங்கள் ஆகிவிட்டது. முதல் பிரதிவாதி அறக்கட்டளைக்காக ஹாஸ்டல் மற்றும் பொறியியல் கல்லூரி கட்டிடங்கள் கட்டினேன். எந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் கட்டிடம் கட்டப்பட்டது என்றால் கிழக்கு நோக்கி ஒரு கட்டிடமும், கல்லூரிக்கு நுழையும் இடத்தில் மற்றொரு கட்டிடமும் கட்டப்பட்டது. எவ்வளவு விஸ்தீரணம் என்று தற்போது தெரியாது. ஹாஸ்டல் இரண்டு தளங்கள் கொண்டது. பொறியியல் கல்லூரிக்கு ஒரே கட்டிடம் தான் கட்டப்பட்டது. அதன் நீளம் சுமார் 200 முதல் 250 அடி இருக்கும். அதில் 3 தளங்கள் கட்டப்பட்டது. மூன்று தளங்களும் சேர்ந்து எவ்வளவு தொகையில் கட்டப்பட்டது என்றால் தெரியாது. 8,9 வருடங்கள் ஆகிவிட்டது . 2 ம் பிரதிவாதி என்னுடைய மாமா. அவரது மனைவி ரீசா 7 ம் பிரதிவாதி. அவர் எனது பெரியப்பா மகள். காளியாம்பட்டி பெருமாளை தெரியும். அவர் என் பெரியப்பா மகன். பெருமாள் 2 ம் பிரதிவாதியின் மைத்துனர். பெருமாள் 7 ம் பிரதிவாதியின் அண்ணன். பொறியாளர் வரைபடம் தயாரித்து கொடுத்தார். அவரும் தினமும் வருவார். பொறியாளர் பெயர் ரஹமதுலா. அவர் கோட்டப்பாளையம் பள்ளியில்

ஆசிரியராக பணியாற்றுகிறார். நான் அரிசி கடை வைத்து 4,5 வருடங்களாக வியாபாரம் செய்கிறேன். வங்கியில் போட்ட பணத்தை காசோலை மூலம் எடுத்துக் கொள்வேன். கல்லூரி வங்கி கணக்கிலிருந்து என் வங்கிக்கு பணம் வரும் என்று சொன்னார்கள். நான் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்கிறேன் என்றால் நிலம் கேட்டால் வாங்கி கொடுப்பேன். கல்லூரிக்கு நிலம் வாங்கி கொடுத்தேன். எனக்கு கட்டிடம் கட்டும் வேலை எதுவும் தெரியாது என்றும், நான் காண்ட்ராக்ட் தொழில் செய்யவில்லை என்றும், 2 மற்றும் 7 ம் பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி அறக்கட்டளை என் வங்கியில் பணம் போட்டு மீண்டும் பெற்று கொண்டார்கள் என்றால் சரியல்ல. கட்டுமான பொருட்கள் வாங்கியதற்கு பில்கள் உள்ளதா என்றால் 8,9 வருடங்கள் ஆகிவிட்டதால் இல்லை.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி என்னுடைய உறவினர் தான். முதல்பிரதிவாதி என் வங்கி கணக்கிற்கு அனுப்பிய பணத்தை எடுத்து கட்டுமானம் பணி செய்த கூலியாட்களுக்கு கொடுத்தேன்.

3,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.